கண்ட்ராக்டர்களிடத்தில் இத்தனை வருஷத்திற்குள்ளாக இந்தக் கட்டிடத்திற்கு பழுது ஏற்பட்டால் அவரிடத்தில் அதற்கான நஷ்ட ஈட்டை வசூலிக்கும் நிலைமையை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக எல்லாக் கட்டிடங்களும் அவ்வாறு பழுது பார்க்கவேண்டிய நிலை உடனடியாக ஏற்படுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு விதிகள் இருக்கின்றன. கண்டிராக்டர் செய்வதில் தவறு ஏற்பட்டால் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. வீ. ராமநாதன் : ஸார், நாட்டிலே உள்ள நெருக்கடி நிலை காரணமாக புதிதாக கட்டப்பட இருக்கிற பஞ்சாயத்து யூனியன் கூட்டமன்ற கட்டிடங்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்படுகின்றதா ? அந்த முறையில் குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து யூனியன் கட்டிடம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பார்த்துச் செய்யப்படும். இனி தொடங்க வேண்டிய கட்டிடங்கள் இப்போதைய நெருக்கடி நிலையை ஒட்டி நிறுத்தப்பட்டுத்தான் இருக்கின்றன.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஆவுடையார்கோயில் பஞ்சாயத்து யூனியன் கட்டிடம் மழை வந்த நேரத்தில் பழுது பார்க்கப்பட்டது என்று சொன்னார்கள். கட்டிடம் கட்டி எவ்வளவு நாட்களில் பழுது ஏற்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 1961-ம் ஆண்டு கட்டியது. அதற்கப்புறம் அடைமழை பெய்தது. பழுது பார்க்க வேண்டிய நிலை பின்னல் ஏற்பட்டது என்று சொன்னேன்.

அரசாங்க பாடப் புத்தகக் குழு

* கேள்வி. 461.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க பாடப்புத்தகக் குழு (**Government Text-book Committee**) அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களை மீண்டும் தணிக்கை செய்ய அரசாங்கத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாடப் புத்தகக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள் சிலவற்றில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே இவ்விஷயமாக அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

Approved text-books

* 462 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a list of books ordered to be deleted from the approved list of text-books, for reasons of National Integration?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The approval of the book " Nalum Irandum " has been cancelled by the Director of Public Instruction.

9-30 a.m.

திரு. ஆ. கு. சுப்பையா : அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களைத் தணிக்கை செய்யும்போது, அவற்றில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் எழுதிய புத்தகம் அவ்வாறு இருந்தது ? அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன ?